**கவனிக்க.-** *16.11.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1786 - 2012 නොවැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2012.11.23

*1786 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 162 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |



**கவனிக்க.-** (i) குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் 2012, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) பியசேன கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2012, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பி. கே. எஸ். ரவீந்திர,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2012 ஆம் ஆண்டு யுன் மாதம் 23 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## மொஹான் லால் கிரேரு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மனுஷ நாணாயக்கார, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''மொஹான் லால் கிரேரு மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. ஆங்கில மொழிக்கு முக்கியத்துவமளித்து மொழி அறிவு மற்றும் கல்வியை விருத்தி செய்தல், மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ;

2. வசதியற்றோரின் கல்வி மற்றும் பௌதீக சேமநலன்/நல்வாழ்வு மற்றும் முன்னேற்றத்தை விருத்தி செய்தல், முன்னேற்றுதல் மற்றும் தேவைப்படும் வழிகாட்டல்கள், ஆலோசனைகளை நெறிப்படுத்தல் ;

3. கல்வி, விஞ்ஞானம், கலாச்சாரம், இலக்கியம், கலை, நுண்கலை மற்றும் உடல் ஆற்றல்கள் மற்றும் திறமைகளை ஏற்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் நடத்திச் செல்லல் ;

பிறவும்.

மனுஷ நாணாயக்கார,
பாராளுமன்ற உறுப்பினர்,
காலி மாவட்டம்.

11-839

## இலங்கை நிர்மாணக் கைத்தொழில் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

திலங்க சுமதிபால, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் ''இலங்கை நிர்மாணக் கைத்தொழில் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த இலங்கை நிர்மாணக் கைத்தொழில் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

(1) 1982 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 21 இன் கீழ் 2003, மாச்சு 25 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதும் அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின்கீழ் 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் 3 ஆந் திகதி மீள் பதிவு செய்யப்பட்டதுமான இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சம்மேளனத்தின் செயற்பாடுகளையும், தொழிற்பாடுகளையும், சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றல் ;

(2) தேசிய நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்தலும், பாதுகாத்தலும், அதன் அக்கறைகளை பிரதிநிதித்துவப் படுத்தல் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களின் அபிப்பிராயங்களைத் தெரிவித்தல் ;

(3) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் தேசிய, நியதிச்சட்ட மற்றும் சட்டவாக்கக் குழுமங்களால் கலந்தாராய்வதற்கு தேசிய நிர்மாணக் கைத்தொழிலுக்கு விசேட குழுமமாக செயலாற்றுதல் ;

பிறவும்.

திலங்க சுமதிபால,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

11-876

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.